# சொத்து விலை உயர்வு, கட்டுமான தாமதம் நீடிக்கும் வாய்ப்பு

கட்டுமான தொழில்துறையின் சவால்கள் குறைந்தபட்சம் இந்த ஆண்டு முழுவதும் நீடிக்கக்கூடும் என்று வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். அரசாங்கம், தொழிற்சங்கங்கள், வங்கிகளின் ஆதரவு இருந்தாலும்கூட இந்த நிலை நீடிக்கும் என்பது அவர்களின் கணிப்பாக உள்ளது.

இதனிடையே, அடுத்த ஆறு மாதங்களில் ஊழியர் செலவு அதிகரித்துவிடும் என்று ஏறத்தாழ 88% கட்டுமான நிறுவனங்கள் மிகவும் கவலைப்படுவதாக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் அண்மையில் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த அளவு முதல் காலாண்டில் 71% ஆக இருந்தது. கட்டுமான சாதனங்களின் செலவு அதிகரிப்பது பற்றி தாங்கள் கவலை கொள்வதாக ஏறத்தாழ 58% நிறுவனங்கள் தெரிவித்தன.

இந்த விகிதாச்சாரம் முதல் காலாண்டில் 45.8% ஆக இருந்தது. கட்டுமானச் செலவுகள் பற்றி அதிகளவில் கவலை தெரிவிக்கப்பட்டு இருப்பது இதுவே முதல் முறை என்று இந்தப் பல்கலைக்கழகத்தின் தொழில்துறைப் பள்ளியைச் சேர்ந்த நிலச்சொத்துத் துறை தலைவர் பேராசிரியர் சின் டியன் ஃபூ தெரிவித்தார்.

நிலைமைகள் வழக்கமான நிலைக்குத் திரும்ப ஒன்று முதல் மூன்றாண்டு காலம் ஆகக்கூடும் என்று சிங்கப்பூர் சிறு கட்டுமான நிறுவனங்கள் சங்கத்தின் தலைவர் ஐயன் டியோ கூறினார்.

கட்டுமானத் தொழில்துறைக்குத் தொழிற்சங்கங்களும் அரசாங்கமும் ஆதரவு அளித்து வருகின்றன.

என்றாலும்கூட இந்தத் தொழில் துறையின் மதிப்பு அதிகரிப்பு, கொவிட்-19 தொற்றுக்கு முந்தைய நிலையுடன் ஒப்பிடும்போது இன்னமும் 29 விழுக்காடு குறைந்து இருப்பதாக வர்த்தக தொழில் அமைச்சு தெரிவித்தது.

இந்த வேளையில், குடியிருப்புச் சொத்துகளுக்கான தேவையும் விலையும் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆறு மாதங்களில் மேலும் பல வீடுகள் விற்பனைக்கு வரும் என்று இந்தப் பல்கலைக்கழகம் இரண்டாவது காலாண்டில் ஆய்வு நடத்திய நிறுவனங்களில் ஏறத்தாழ 54% நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஆறு மாதத்தில் விற்பனைக்கு வரும் புதிய வீடுகளின் விலை கணிசமாக அதிகமாக இருக்கும் என்று 63 விழுக்காட்டு நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன.

இவ்வேளையில், இந்த ஆண்டின் முதல் பாதியில் 14,000க்கும் மேற்பட்ட வீவக மறுவிற்பனை வீடுகள் கைமாறி இருப்பதாக ஆரஞ்ச்டீ நிறுவனத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அதே கால கட்டத்தில் விலை 6% அதிகரித்து இருக்கிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.